**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093900

1. District : மாவட்டம் மதுரை    PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு    Year: ஆண்டு 2019    FIR No. மு.த.அ. எண் 14/19    Date: நாள் 28-06.2019

2. (i) Act சட்டம்:    Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by Prevention of corruption (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: Prevention of corruption Act 1988    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை (1) 25.06.2019 at 12.30 மணி
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை (2) 27.06.2019 at 11.00 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.06.2019    Time : நேரம் 09.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.06.2019    Time : நேரம் 09.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 8.கி.மீ வடக்கு
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address முகவரி ஊராட்சி அலுவலகம், ஆலாத்தூர் ஊராட்சி, மதுரை
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தத்தவர் பெயர் M.சங்கரலிங்கம்    (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் S.மாரிமுத்து
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.05.1980    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துறை    (g) Address : முகவரி 91/4, காவலர் குடியிருப்பு, ஜீவானந்தபுரம், ரிசர்வ் லைன், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு.சுந்தரபாண்டி, ஊராட்சி செயலர், ஆலாத்தூர் ஊராட்சி, மதுரை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.S [signature] 28/06/19

A. Kannan
INSP (N) PAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 28/6/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.06.2019 at 10.15 hrs.

Name: பெயர் A. கண்ணன்.
Rank: நிலை ............ No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.கு.பு. பிரிவு,
மதுரை (28.06.2019)

* GCP-240-34(Type 2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 28.06.2019-ஆம் தேதி காலை 09.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை, ரிசர்வ் லைன், விஸ்வநாதபுரம், காவலர் குடியிருப்பில் உள்ள கதவு எண் G-1/4-லில் வசிக்கும் S.மாரிமுத்து மகன் திரு. M.சங்கரலிங்கம் என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் M. சங்கரலிங்கம் த/பெ. S. மாரிமுத்து, G-1/4, காவலர் குடியிருப்பு, விஸ்வநாதபுரம், ரிசர்வ் லைன், மதுரை. பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் மதுரை மாநகர் அண்ணாநகர் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். விஸ்வநாதபுரம் காவலர் குடியிருப்பில் குடும்பத்துடன் வசிக்கிறேன். நான் மதுரை வடக்கு தாலுகா ஆலாத்தூர் கிராம ரீசர்வே எண் 27/2 & 27/7-ல் பிளாட் நம்பர் 55 மனை இடத்தை உரிய முறையில் துறை அனுமதி பெற்று வாங்கியுள்ளேன். மேற்படி இடத்தில் 1040 சதுரடி அளவில் வீடு கட்ட முடிவு செய்து, கடந்த 28.03.2019-ம் தேதியன்று கட்டிட வரைபடம் அனுமதி வேண்டி ஆலாத்தூர் ஊராட்சி அலுவலகம் சென்று அங்கு பணியிலிருந்த ஒரு நபரிடம் விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்துடன் எனது Affidavit, Appendix, எனது இடத்தின் பத்திர நகல், ரோடு தானம் செய்த பத்திர நகல், வரைபடம், வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கிய வரன்முறை செயல் ஆணை நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அவர் அதனைப் பெற்றுப் பார்வையிட்ட பின்னர், நான் இணைத்துள்ள ஆவணங்கள் போதுமானவை என்றும், அரசு கட்டணமாக ரூ.19,381/- செலுத்த வேண்டும் என்றும் கூறி, நான் கொடுத்த விண்ணப்பத்தை அலுவலகத்தில் வைத்துக் கொண்டார். அதன் பின்னர் தேர்தல் பணி காரணமாக நான் பாதுகாப்பு அலுவலுக்குச் சென்று விட்டதால், என்னால் மேற்படி கட்டணத்தை செலுத்த இயலவில்லை. எனவே, கடந்த 25.06.2019-ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் மேற்படி வரைபட அனுமதி சம்மந்தமாக ஆலாத்தூர் ஊராட்சி அலுவலகம் சென்று, அங்கிருந்த ஊராட்சி செயலர் திரு.சுந்தரபாண்டியிடம் கேட்ட போது, அவர் நான் ஏற்கனவே கொடுத்த விண்ணப்பத்தை எடுத்துப் பார்வையிட்ட பின்னர், கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு என்னென்ன கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி ரூ.19,381/-க்கு Demand Draft எடுத்து வருமாறு கூறினார். உடனே நான் நாராயணபுரம் ஸ்டேட் வங்கி கிளைக்குச் சென்று ரூ.19,381/-க்கு "THE SPECIAL OFFICER, ALATHUR PANCHAYAT" என்ற பெயரில் Demand Draft எடுத்துக் கொண்டு மீண்டும் ஆலாத்தூர் ஊராட்சி அலுவலகம் சென்று சுந்தரபாண்டி அவர்களை மதியம் சுமார் 12.30 மணியளவில் நேரில் சந்தித்து வரைவோலையைக் கொடுத்தேன். அதனைப் பெற்றுக் கொண்ட திரு.சுந்தரபாண்டி

என்னிடம், அரசுக்கு செலுத்த வேண்டிய வரைவோலை தொகை சரியாக உள்ளது என்று சொல்லிவிட்டு, அவர் தனக்கு ரூபாய் 15,000/- கொடுத்தால் தான் மேற்படி கட்டிட வரைபட அனுமதி தயார் செய்து பெற்றுத் தர ஏற்பாடு செய்ய முடியும் என கூறினார். நான் அவரிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்துக்குரிய வரைவோலை சரியாக செலுத்தியுள்ள போது, வேறு எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் கட்டிட வரைபட அனுமதிக்கு அரசுகட்டணம் போக, எல்லோரிடமும் வழக்கமாக ரூ.15,000/- வாங்குவோம், அதைக் கொடுத்தால்தான் வேலை முடியும் என்று சொன்னார். நான் எதுவும் சொல்லாமல் திரும்பி வந்துவிட்டேன். அதன்பின்னர், நேற்று 27.06.2019-ம் தேதி காவல் நிலையத்தில் எனக்கு பணியில்லா ஓய்வு என்பதால், திரு.சுந்தரபாண்டியை மீண்டும் சந்தித்து பேசலாம் என்று நினைத்து காலை சுமார் 11.00 மணியளவில் ஆலாத்தூர் ஊராட்சி அலுவலகம் சென்றேன். அங்கிருந்த சுந்தரபாண்டியிடம் கட்டிட வரைபட அனுமதி குறித்து கேட்ட போது, அதற்கு அவர், என்னிடம் பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் அவரிடம் ரூ.15,000/- என்பது அதிகமாக உள்ளது, என்று கூறினேன். அதற்கு திரு.சுந்தரபாண்டி என்னிடம் உங்களுக்காக வேண்டுமானால் 3000 ரூபாய் குறைத்துக் கொள்கிறேன், ரூ.12,000/-த்தை கண்டிப்பாக கொடுத்தால் மட்டுமே கட்டிட வரைபட அனுமதி தயார் செய்து பெற்றுத்தர முடியும் என்றும், அந்தப் பணத்தை இன்று 28.06.2019-ம் தேதி நேரில் சந்தித்து கொடுக்குமாறு கண்டிப்பாகக் கூறினார். ஆலாத்தூர் ஊராட்சி செயலர் திரு.சுந்தரபாண்டி லஞ்சமாக கேட்ட பணம் ரூ.12,000/-த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, அரசு கட்டணம் ரூ.19,381/-ஐ Demand Draft ஆக எடுத்து கொடுத்த பின்பும், கட்டிட வரைபட அனுமதி வழங்க ஏற்பாடு செய்வதற்காக என்னிடம் ரூ.12,000/- லஞ்சமாக கேட்கும் ஆலாத்தூர் ஊராட்சி செயலர் திரு.சுந்தரபாண்டி மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை தங்களிடம் அளிக்கிறேன். இந்த புகார் மனுவுடன், கடந்த 28.03.2019-ம் தேதியன்று நான் ஆலாத்தூர் ஊராட்சி அலுவலகத்தில் கொடுத்த ஆவணங்களின் நகல்களான 1) Affidavit, 2) Appendix, 3) எனது இடத்தின் பத்திர நகல், 4) ரோடு தானம் செய்த பத்திர நகல் 5) வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கிய வரன்முறை செயல் ஆணை நகல் மற்றும் 6) நான் 25.06.2019-ம் தேதி பணம் ரூ.19,381/-ஐ அரசு கட்டணமாக செலுத்திய வரைவோலையின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) M. சங்கரலிங்கம் 28/06/19. Sir, received the written complaint on 28.06.2019 at 09.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai Vigilance & Anti-

Corruption in Cr. No. 14/2019 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.30 hrs and took up investigation Sd./-XXXXXX (A.Kannan) 28.06.2019, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original written complaint of Tr. M.Sankaralingam, S/o. S.Marimuthu, G-1/4, Police Quarters, Viswanathapuram, Reserve Line, Madurai, is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

A. Kannan
InspR V&AC
28/6/19.

(A. Kannan)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.